DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : MC 4/2024 | Deposition of Witness for : RW1 |
| Name : ஜெபராஜ் பிரசாத் | Father/Husband Name : ராஜேந்திரன் |
| Age : 30 | Village : ஜெருசலேம் |
| Taluk : திருச்செந்தூர் தாலுகா. | Calling : மெக்கானிக் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08 May 2026.

Petitioner absent. Petition u/s. 256 CrPC filed and allowed.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ள சங்கதிகள் எல்லாம் சரிதான். என்னுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயித்தது என்றால் சரிதான். திருமணத்தின் போது எங்களின் சொந்த பந்தங்கள் எல்லாம் அழைத்து பிரம்மாண்டமாக செய்தோம் என்றால் சரிதான்.

2. எங்கள் திருமணத்திற்கு போட்டோ, வீடியோ எடுத்தோம் என்றால் சரிதான். சாதாரணமாக ஒரு திருமணம் செய்வதற்கு ரூபாய் 5 லட்சம் செலவாகும் என்றால் சரிதான். வரவேற்பிற்கு நாங்கள் தான் செலவு செய்தோம் என்று எதிருரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எவ்வளவு செலவு என்று குறிப்பிட்டு கூறவில்லை. திருமணத்தின் போது மனுதாரர் வீட்டிலிருந்து என்ன கொடுத்தார்கள் என்றால் கட்டில், பீரோ மட்டும் தான் கொடுத்தார்கள். கல்யாண புடவை, நிச்சயதார்த்த புடவை போன்றவை திருமணத்திற்கு எடுப்பது வழக்கம் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பாகவே எனக்கு குடிபழக்கம் உள்ளது என்றால் சரியல்ல.

3. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சவுண்டு சர்வீஸில் வேலை செய்தேன். தற்போது இரண்டு மாதமாக சென்னையில் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னுடைய ஊதியம் ரூபாய். 6500/- ஆகும். சாதாரணமாக ஒருவேலைக்கு சென்றாலே தினக்கூலி ரூபாய். 1000/- கிடைக்குமா என்றால் நான் வேலைக்கு சேர்ந்து இரண்டு மாதங்களே ஆகிறது. எனக்கு வேலைக்கு ஏற்ப கூலியா இல்லை என்றால் வேலைக்கு சென்றால் தான் கூலியா என்றால் வேலைக்கு சென்றால் தான் கூலி.

4. என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன். அவருக்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும், மனுதாரரும் சென்னையில் போய் குடியிருந்தது எந்த மாதம், எந்த வருடம் என்றால் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம். நானும், மனுதாரரும் சென்னையில் எத்தனை காலம் வாழ்ந்தோம் என்றால் ஆறு மாதம் வாழ்ந்தோம். நாங்கள் இரண்டு பேரும் தனியாக தான் சென்னையில் குடியிருந்தோம் என்றால் சரிதான். நாங்கள்

சென்னையில் தனியாக இருந்த போது மனுதாரரும், நானும் சந்தோஷமாக இருந்தோம் என்றால் சரிதான். அப்படி சந்தோஷமாக இருந்த காலத்தில் எங்களுக்குள் உடலுறுவு எதுவும் நடந்ததாக என்றால் நடந்தது.

5. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிருரையில் நான் சொன்ன சங்கதிதான் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டில் எத்தனை இன்ச் LED டிவி உள்ளது என்றால் LED டிவி இல்லை. நாங்கள் சென்னையில் குடியிருந்த வீடு காங்கிரிட் வீடு, வாடகை வீடு, 55" LED டிவி இருந்தது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகளில் நான் படித்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான். அதில் நான் கையெழுத்து செய்தது எந்த மாதம், நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது எந்த மாதம் என்றால் 2022 இல் தாக்கல் செய்தோம். மேற்படி ஆவணம் தாக்கல் செய்தபோது நான் சவுண்ட் சர்வீஸ் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான்.

6. நான் இதுவரை எவ்வளவு சம்பளம் வாங்கினேன், என்ன வேலை செய்தேன் போன்ற விபரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடைசியாக மனுதாரரை அவரது தாயார் வீட்டிற்கு எப்பொழுது அனுப்பி என்றால் ஆகஸ்ட் மாதம் 2022 இல் அனுப்பி வைத்தேன். என்னுடைய உடல் ரீதியான குறைபாட்டிற்கு நான் மருத்துவம் எடுத்தேன் என்றால் சரியல்ல. நான் காயாமொழியில் உள்ள ஒரு டாக்டர் அருள் சந்திரன் என்பவரிடம் மருத்துவம் பார்த்தேன் என்றால் சரிதான். நானும், மனுதாரரும் எத்தனை வருடம் ஒன்றாக இருந்தோம் என்றால் ஒரு வருடம் ஒன்றாக வாழ்ந்து வந்தோம். என்னுடைய குடிப்பழக்கம் பற்றியோ, அதற்கு எடுத்துக்கொண்ட மருத்துவம் பற்றியோ எந்த மனுவிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

7. குடிப்பழக்கம் உள்ளவர்கள் மருந்து எதுவும் எடுத்துக்கொண்டால் மருந்து வேலை செய்யாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய குறைபாட்டிற்கு நாளதுதேதிவரை மருத்துவம் பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு குறைபாடே இல்லை. நான், மனுதாரருடன் உடலுறவில் இருக்கும் போது நான் மனுதாரரை அடித்து காயப்படுத்தினேன் என்றால் அது பொய். சென்னையில் நானும், மனுதாரரும் குடியிருந்த போது நான் வேலைக்கு சென்றுவிட்டு வரும்போது குடித்துவிட்டு வருவதால் சண்டை வரும் என்றால் சரியல்ல. குடிபழக்கம் எனக்கு இல்லை. சென்னையில் இருந்து திருப்பி ஊருக்கு வந்த பிறகும் நான் என்னுடைய செயல்பாடுகளை மாற்றி கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்று எப்பொழுது எனக்கு தெரியும் என்றால், 2021 இல் நாங்கள் கோயம்புத்தூர் சென்றபோது மனுதாரர் மருத்துவமனையில் இருக்கிறார் என்று மனுதாரர் கூறினார். எதற்காக மருத்துவமனையில் இருந்தார் என்று கேட்டதற்கு உடம்பு சரியில்லை என்று கூறினார். எனக்கும், மனுதாரருக்கும் திருமணம் முடிந்து எந்த வருடம், எந்த மருத்துவமனையில் குழந்தை இல்லை என்று சிகிச்சை பெற சென்றோம் என்றால் 2021 ஆம் ஆண்டு கனி மருத்துவமனைக்கு சென்றோம். எதிருரையில் மனுதாரருக்கு வலிப்பு நோய் உள்ளது என்று நான் கூறியுள்ளது எப்படி எனக்கு தெரியும் என்றால் மனுதாரரின் அப்பா கூறியதால்

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.05.08 17:48:27 +0530 

எனக்கு தெரியும்.

9. மனுதாரருக்கு உடல்ரீதியாக பிரச்சனை உள்ளது என்றும், அதற்கு மருத்துவம் பார்ப்பதும் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் இராமமூர்த்தி மருத்துவமனை மருத்துவர் கூறினார். அவருக்கு சிறுநீரக செயலிழப்பு என்று கூறினார். அது முன்பே இருந்து வருவதாக கூறினார். அதற்கு பிறகு திருநெல்வேலியில் உள்ள சிறுநீரக கோளாறுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை மேற்கொண்ட போது அவ்வாறு தெரிந்தது. மருத்துவமனைக்கு மனுதாரருடன் நான் சென்ற விபரத்தை எதிருரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். இதுவரைக்கும் மனுதாரர் மருத்துவமனையில் பெற்று வரும் சிகிச்சைக்கு நான் எந்த விதத்தில் பணம் கொடுத்தேனா என்றால் நாளது தேதிவரை மனுதாரருக்கு ரூபாய். 10,000/– மருத்துவ செலவிற்காக கொடுத்துள்ளேன். இதுவரைக்கும் மருத்துவ செலவிற்கு எந்த பணமும் தரவில்லை என்றால் ரூபாய். 5000/– கொடுத்துள்ளேன்.

10. எதிருரையில் என்னுடைய வீடு மண் வீடு என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வீடு இடிந்துவிடும் என்றும், கம்மல் வாங்கி கொடுத்ததாகவும் எதிருரையில் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி விட்டு வேண்டுமென்றே 1, 2, 3 எதிர்மனுதார்கள் புறக்கணித்து வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மனுதாரரை கவனிப்பது என்னுடைய கடமை என்றால் சரிதான். எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கேட்டுள்ள பரிகாரங்கள் அனைத்தும் அவருக்கு வழங்கப்பட வேண்டும் என்றால் சரிதான். கட்டில், பீரோ முதலான மனுதாரரின் சீதன பொருட்கள் என்வசம் தான் உள்ளது என்றால் சரிதான். மனுதாரரை நான் கணவர் என்ற முறையில் அவருக்கு எந்த கடமையும் செய்யாமல் தட்டி கழித்து கொண்டு பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. நீதிமன்றத்தில் இடைக்கால ஜுவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்ட விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இதுவரை மனுதாரருக்கு எவ்வளவு பணம் ஜுவனாம்சம் கொடுத்துள்ளேன் என்றால் நான் நான்கு மாதங்கள் பணம் கொடுத்துள்ளேன். மனுதாரருக்கு இடைக்கால ஜுவனாம்சம் நாளது தேதிவரை மாத மாதம் முறையாக கொடுக்கவில்லை என்றால் இந்த மாதமும், போன மாதமும் கொடுக்கவில்லை. நான் வேண்டுமென்றே பொய்யான குற்றச்சாட்டை வைத்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் என்மீது என்னென்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 2 மாதங்களுக்கு முன்புதான் எனக்கு அந்த விபரம் தெரியும். மேற்படி விவாகரத்து மனுவில் என்ன சங்கதிகள் கூறியிருக்கிறேன் என்றால் எனக்கு தெரியாது.

12. நான் இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யான சங்கதிகளை கூறி மனுதாரரை வேண்டுமென்றே அலைக்கழித்து வருகிறேன் என்பது சரிதானா என்றால் சரியல்ல.


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.08 17:48:35 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.08 17:48:40 +0530

Judicial Magistrate, Sathankulam.